"கோவை ஜில்லாவில் பல்லடம் தாலுக்காவில் பருவமழை தவறி விட்டதால் பஞ்சம் ஏற்பட்டுள்ள நிலையில் மின்சார பம்புசெட்டு உபயோகிக்கும் விவசாயிகளுக்கு மின்சார இலாகா அடிஷனல் செக்யூரிடி டிபாசிட் என்ற தொகை வசூல் செய்வதற்காக விவசாயிகளுக்கு நோட்டீஸ் கொடுக்கப்பட்டுள்ளதை ஓராண்டு தள்ளிவைக்க வேண்டிய அவசியம்பற்றிய அவசரப் பொது முக்கியமான காரியத்தை மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன்: தலைவர் அவர்களே, நடைமுறையிலுள்ள விதிகளின்படி தமிழ்நாடு மின்சார வாரியம் விவசாயம் உட்பட எல்லா மின்சாரம் பயன் படுத்துவோரிடமிருந்தும் மூன்று மாதத்திய மின்சாரக் கட்டணம் தோராயமாக நிர்ணயித்து முன் பணமாக வசூலிக்கிறது. இம்முன் பணம் மூன்று மாதக் கட்டணத்துக்கும் குறைவாயுள்ளது என்று தெரியும்பொழுது மேலும் அதிகப்படி முன் பணம் கட்டும்படி மின்சார வாரியம் சம்பந்தப்பட்ட நபர்களைக் கேட்கிறது. மின்சாரம் உபயோகிப்போர் இந்த அதிகப்படி முன் பணத்தை ஒரே தடவையில் கட்டுவதற்குச் சிரமம் தெரிவித்தால் ஒவ்வொரு நபரின் பிரச்சினையும் உசிதமான முறையில் பரிசீலிக்கப்பட்டு, அந்நபர்கள் இவ்விதிகளின்படி பணத்தை தவணை முறையில் கட்டுவதற்கு அனுமதிக்கப்படுகிறார்கள்.

திரு. கே. என். குமாரசாமி: கடந்த மூன்று ஆண்டு காலமாக மழை பெய்யாக் காரணத்தினால் ஏற்கெனவே இரண்டு ஆண்டுகளுக்கு முன்பு அடிஷனல் செக்யூரிடி டெபாசிட் தள்ளிவைக்கப்பட்டு, மறுபடியும் மீண்டும் இந்த ஆண்டு அப்படித் தள்ளிவைக்கப்பட்ட டெபாசிட் தொகையை வசூல் செய்வதற்கான நோட்டீஸ் கொடுக்கப்பட்டுள்ளது. இந்த ஆண்டு பருவ மழை தவறி வறட்சியாக இருப்பதன் காரணமாக, மேலும் அந்த டெபாசிட் தொகையைக் கட்ட முடியாத நிலையில் விவசாயிகள் திண்டாடுவதால், மீண்டும் அது தள்ளி வைக்கப்பட்டு, அப்படிக் கொடுக்கப்பட்ட நோட்டீஸ் இந்த ஆண்டும் நிறுத்திவைக்கப்பட வேண்டும் என்று கேட்டுக் கொள்வதோடு, அதை அமைச்சர் அவர்கள் உத்தரவு மூலம் செய்யுமாறு வேண்டுகிறேன்.

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன்: தலைவர் அவர்களே, எல்லா விவசாயிகளுக்கும் தள்ளி வைக்க வேண்டும் என்று சொல்லுவதைவிட, கூடுதலான சிரமம் உள்ள விவசாயிகளுக்கு—தனிப்பட்ட முறையில் மின்சார வாரியத்திற்கு தெரிவித்தால், அதைப் பரிசீலனை செய்து—இப்பொழுது இருப்பது போல தவணை முறையில் அனுமதிக்கப்படும் என்பதைத் தெரிவிக்கிறேன்.

8. அறிக்கைகள் அளித்தல்.

(அ) கல்லூரி கல்வி குறித்த பரிந்துரைகள்மீது அரசு எடுத்த நடவடிக்கை மீதான மதிப்பீட்டுக் குழுவின் அறிக்கை.

THIRU S. AGNIRAJU: Mr. Speaker, Sir, I rise to present the Report of the Committee on Estimates on the action taken by the Government on the recommendations of the Committee contained in the Report on Collegiate Education (Sixth Report).

(ஆ) 1965-66-ம் ஆண்டிற்கான நிதி ஒதுக்கக் கணக்குகள் 1967-ம் ஆண்டிற்கான தணிக்கை அறிக்கை ஆகியவற்றின் மீதான பொதுக் கணக்காய்வுக் குழுவின் அறிக்கை

THIRU P. G. KARUTHIRUMAN: Sir, I rise to present the Report of the Committee on Public Accounts (1968–69) on the Appropriation Accounts 1965–66 and Audit Report, 1967.